# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
# <u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
# <u>MCOP . No.1 /2024</u>

**<u>நாள் : 23.03.2026</u>**

**ம.சா.** 1 திருமதி.ராதா

சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

என்னிடம் காட்டப்படும் பேருந்தில் பயணித்ததற்கான ம.சா.ஆ.12 டிக்கெட்டானது ஜெராக்ஸ் என்றால் சரிதான். அதன் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதன் அசலை தாக்கல் செய்யாததால் அந்த ஆவணம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பேருநதில் உண்மையிலேயே பயணம் செய்திருந்தால் அசல் டிக்கெட்டை தாக்கல் செய்திருப்பேன் என்றம், அவ்வாறு பயணம் செய்யாததால்தான் அசல் டிக்கெட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டுநருக்கு இடது புறத்தில் அமர்ந்தவண்ணம் பேருநதில் பயணித்தேன். நான் பயணித்ததாக சொல்லப்படும் பேருந்தானது சேலத்திலிருந்து வந்தது. மேற்படி பேருந்து ஓட்டுநர் தூக்க கலக்கத்தில் பேருநதை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல, சாட்சி பின்னிட்டு அதனை சரிவர கவனிக்கவில்லை என்று கூறுகிறார். மேற்படி பேருந்தானது பிரேக் டவுனாகி நின்றிருந்த கன்டெய்னர் லாரிமீது மோதியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் (ம.சா.ஆ.6) கன்டெய்னர் லாரியின் பின்புறத்தில் இடதுபுறத்தில் உள்ள சக்கர மைய பகுதியில் உள்ள ஆக்சிலானது சக்கர பாகங்களிலிருந்து விடுபட்டு உடைந்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கன்டெய்னர் லாரி நின்றுகொண்டிருநத நிலையில் அதை சரிவர கவனிக்காமல் பேருந்தின் ஓட்டுநர் தூக்க கலத்தில் பேருந்தை ஓட்டிச் சென்று கன்டெய்னர் லாரிமீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. விபத்தானது கன்டெய்னர் லாரியின் ஓட்டுநரால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்க, முழுக்க பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. நான் பேருந்தில் ஓட்டுநரின் இடது புறத்தில் உள்ள சீட்டில் அமர்ந்து பயணித்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. கன்டெய்னர் லாரி ஓட்டுநர்மீது 3ஆம் எதிர்மனுதாரரின் உந்துதலின்பேரில் முதல் தகவல் அறிக்கையானது பதிவு

செய்யப்பட்டிருந்தாலும்கூட முழுமையான புலன் விசாரணைக்கு பின்னிட்டு கன்டெய்னர் லாரி ஓட்டுநர்மீது எந்த தவறும் இல்லை என்பதால்தான் இதுநாள் வரை குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்க, முழுக்க காரணம் நான் பயணித்த பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் சிஎம்சி மருத்துவமனையில் போலீசார் பெயர் மட்டும் கேட்டு தெரிந்துகொண்டதாக சாட்சி தானாக கூறுகிறார். நான் சிம்சி மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதற்குண்டான ம.சா.ஆ.13, 15 ஆவணங்கள் சம்பந்தப்பட்ட ஒருங்கிணைந்த பில்களை தாக்கல் செய்தால்தான் அதன் உண்மைத்தன்மை தெரிய வரும என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பில்கள் அனைத்தும் உண்மையானவை என்று சாட்சி கூறுகிறார். ம.சா.ஆ.2 டிஸ்சார்ஜ் சம்மரியில் எனது ஊனம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த வித ஊனமும் இல்லாததால்தான் ம.சா.ஆ.2 ல் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காய்கறி வியாபாரம் செய்து வந்ததை காட்டும் ஆவணம் தாக்கல் ெ ய்யவில்லை என்றால் அதற்கு ஆவணம் ஏதும் கிடையாது. ஏனெனில் நான் தள்ளுவண்டியில் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் தள்ளுவண்டியில் வைத்து காய்கறி வியாபாரம் செய்து வந்ததாக மனுவில சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலம் எனது மகனுடன் சேர்ந்துதான் காய்கறி வியாபாரம் செய்து வந்ததாக மனுவில சொலலியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபடி எனக்கு எந்த சம்பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதிகப்படியான இழப்பீடு கிடைக்கும் நோக்கில் காய்கறி வியாபாரம் செய்து வருவாய் ஈட்டி வந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு பின்னிட்டு நேரடியாக சி எம் சி மருத்துவமனைக்குத்தான் போனேன். வேறு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை. நான் ரூ.2 இலட்சத்திற்கு மருத்துவ செலவுகள் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை செய்தபோது வைக்கப்பட்ட ஸ்டீல் ராடுகளை அகற்றுவதற்காக ரூ.1 இலட்சம் தொகையை உத்தேச செலவினங்கள் செய்ததாக சொல்லியுள்ள அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.14 போக்குவரத்து

பில்களான வழக்கிற்காகவேண்டி தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்னால் நடக்கமுடியாததால்தான் காரில்தான் மருத்துவமனைக்கு போனேன். மேற்படி ஆவணம் ஒரே நபரிடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளதால் அவை வழக்கிற்காகேண்டி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மனு தாக்கல் செய்தபோது மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காகவேண்டி தயார் செய்ததால்தான் பின்னிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆம்பூர் பஸ் நிலையத்தில் இருந்து விடியற்காலை 5 மணிக்கு பஸ் ஏறினேன். விபத்து ஏற்பட்டபோது அதிகாலை 5.30 மணி இருக்கும். நான் உதவியாளரை வைத்து நாளொன்றுக்கு ரூ.300 கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தினக்கூலிக்காக எந்த ஆதாரமும் கொடுப்பதில்லை, அதனால் என்னால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் தினக்கூலிக்காக ஆள் வைத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்ததாக சொல்லக்கூடிய பேருந்து ஓட்டுநர் கவனக்குறைவாக பேருந்தை ஓட்டி சென்று ஆக்சில் டேமேஜாகி நின்றிருந்த கன்டெய்னர் லாரமீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொணடார் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறாக விபத்து ஏற்பட்டதால் 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் எந்த நஷ்டஈடும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவிலலை என்றால் சரியல்ல. அதிகப்படியான நஷ்டஈடு பெறும நோக்கத்தில் தவறான சங்கதிகளை மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.20,000/- சம்பாதித்தாக சொல்லியுள்ள நிலையில் வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. நான் பைனான்சில் கடன் வாங்கி தான் தொழில் செய்து வந்தேன். நான் பைனான்ஸ்சில் கடன் வாங்கயிதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் விபத்து சமயத்தில் இல்லத்தரசியாக இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் காய் கறி வியாபாரம் செய்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாக வழக்கிற்காக சொலகிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13, 14, 15 ஆவணங்களை பொருத்து அதனை வழங்கியவர்களை விசாரித்தால்தான் அதன் உண்மைத்தன்மை தெரியவரும் என்ற நிலையில் அவை ஏற்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. எனது மனு 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியுடன் மறு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திருப்பத்தூர் மருத்துவ குழு முன்பாக என்னை பரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் என்னை பரிசோதித்ததற்கு பின்னிட்டு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் என்னை பரிசோதித்தார்கள். அவ்வாறு என்னை பரிசோதித்தற்கு பின்னிட்டு எனக்கு 15 சதவீதம் நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக சான்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது நீதிமன்ற ஆவணக்கோப்பில் குறியீடு ஆகாமல் விடுபட்டிருந்த நிலையில் **நீ.ம.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மறுகுறுக்கு விசாரணை**

மேற்படி நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறித்த ஊனமானது எதனடிப்படையில், எதை குறித்த ஊனம் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது காலில் ஏற்பட்ட ஊனத்திற்காக கொடுத்தார்கள் என்று சாட்சி தானாக கூறுகிறார். நீ.ம.சா.ஆ.1ல் காலில் ஊனம் ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அந்தளவிற்கு எனக்கு படிப்பறிவு இல்லை. எனவே நீ.ம.சா.ஆ.1 ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஊனத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் எந்தவிதத்திலும் காரணம் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.